1972 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இப்போது இருக்கிற காவேரியாற்றுச் சிக்கல் காரணமாக மற்ற எல்லா விவரங்களையும் சொல்ல இயலவில்லை. இது முறையாகக் கவனிக்கப்பட்டு, தலைமைப் பொறியாளரால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

Drainage and Water Supply Schemes.

* 838 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI :
THIRU K. N. KUMARASWAMY : } Will the Hon. the Chief Minister be pleased to state the total loans made available to the Government through Life Insurance Corporation for the purpose of Drainage and Water Supply Schemes in Tamil Nadu?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : குடிநீர் வழங்கு—கழிவு நீர் அகற்றுத் திட்டங்களுக்காக இம்மாநிலத்திலுள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கு, ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் 1969-70-ம் ஆண்டிற்காக ரூபாய் 192.33 லட்சமும், 1970-71-ஆம் ஆண்டிற்காக ரூபாய் 270.78 லட்சமும் கடனாக வழங்கியுள்ளது. தொடர்ந்து நிறைவேற்றப்படும் குடிநீர் வழங்கு கழிவுநீர் அகற்றுத் திட்டங்களுக்காக 1971-72-ஆம் ஆண்டில் மொத்தம் ரூபாய் 361.37 லட்சம் கடன் ஒப்பளிக்க ஒப்புக்கொண்டுள்ளதாக ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் தெரிவித்துள்ளது. இதில், இதுவரை ரூபாய் 2 கோடி 14 லட்சத்து 2 ஆயிரத்துக்கான காசோலையை இக்கழகம் வழங்கியுள்ளது. மேலும், வீராணம் திட்டத்திற்காக ரூபாய் 5 கோடி கடன் வழங்கியுள்ளது.

திரு. ஏ. சுப்பிரணியம்: தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடம் கடன் கோரப்பட்டதா? அப்படிக் கோரப்பட்டதற்குக் கடன் கிடைத்ததா? கடன் கிடைக்காமலிருந்தால் அதற்கு மாற்று வழி ஏதாவது இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அந்தத்திட்டம் செயல்படத் தொடங்குவதற்கு முன் அதுபோன்ற முயற்சிகளில் ஈடுபடக் கூடும்.

[1972 எப்ரல் 3

திரு. கே. என் குமாரசாமி : தலைவர் அவர்களே, குடிநீர்த் திட்டத்தை உடனடியாகக் கொண்டுவருவதாக அரசாங்கத்தால் போன ஆண்டு அறிவிக்கப்பட்டு, பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருவதாகவும், அதற்காக உலக வங்கியிடமிருந்து பணம் கடனைப் பெறுவதற்காக குடிநீர் வாரியம் முயன்று வருவதாகவும் குடிநீர் வாரியத் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். அதுசம்பந்தமான நடவடிக்கைகள் செய்து முடிக்கப்பட்டனவா ? அதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றனவா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பொதுவாக கோவைப் பகுதியிலே குடிநீர் வழங்குவதற்காக அரசு பல முயற்சிகளைச் செய்து வருகிறது. சிறுவாணித் திட்டத்தில் ஏற்கெனவே பேச்சுவார்த்தைகள் முடிவடைவதற்குள் இடையில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக நிறைவேற்ற முடியவில்லை. அதுபற்றி வெகு விரைவிலே கோளா மாநில அமைச்சரோடு நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தைகள் நடத்திருக்கிறார்கள். சிறுவாணித் திட்டத்தைப்பற்றிய பேச்சுவார்த்தைகள் முடிவடைந்ததும் தொடர்பான அந்தப் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இப்போது நாகர்கோயில் நகரத்திலே தண்ணீர்ப் பஞ்சம் மிகுதியாக இருக்கிறது. ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடம் 1 கோடி ரூபாய் கடனைக் கோரியிருந்தார்கள். அதுசம்பந்தமாக முடிவெடுக்கப் பட்டதா ? துரிதமாக அந்தக் கடனைப் பெற்றுத் தண்ணீர் விநியோகம் செய்யும் வேலைகள் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நாகர்கோயில் சம்பந்தமான விவரங்கள் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் சொல்லப்படும்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, 1969-லிருந்து 1972 வரை 13 கோடி ரூபாயை நாம் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து வாங்கியிருக்கிறோம். இதற்கு எவ்வளவு வட்டியை நாம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம்? எத்தனை ஆண்டுத் தவணைகளில் கடனைத் திருப்பிக் கட்ட வேண்டும் ?

1972 ஏப்ரல் 3]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, வட்டி 7 சதவீதம். கடன் 20 ஆண்டிலிருந்து 22 ஆண்டுத் தவணைகளில் திருப்பித் தரப்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே. குடிநீர் வாரியத்திற்காக ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து கடன் வாங்கும்போது, கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக நகரசபைகளுக்கும் டவுன்ஷிப்புகளுக்கும் வரி போடுகிறோம். குடிநீர் சம்பந்தமான வேலைகள் முடிவுற்ற பின்னர்தான் நகரசபைகளும், டவுன்ஷிப்புகளும் அதிகமான வரியை விதிக்க வேண்டும். அதுதானே நியாயம். ஆனால் தண்ணீர் வழங்குவது சம்பந்தமான வேலைகள் முடிவுறாமல் இருக்கும்போதே இப்பொழுது அதிகமான வரியை உயர்த்தி வசூலிக்கிறார்கள். ஆகவே, இதுபற்றி அரசாங்கம் என்ன கொள்கையைக் கடைப்பிடிக்கிறது என்பதைச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நியாய அநியாயங்களைப் பரிசீலித்துப் பார்த்து, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்றபடி அதிகமான வரியை வசூலிக்கிறார்களா என்பதைப் பார்த்து, அரசு அதுகுறித்து தக்க முடிவு எடுக்கும்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்சினையைப்பற்றிப் பேசுகையில், கோயம்புத்தூருக்கு, மதுரைக்கு, கன்னியாகுமரிக்கு என்று ஒவ்வொரு ஊராகப் பேசுவதைவிட, தமிழகம் முழுவதற்கும் எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் போட்டு, 1972-க்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் அளிப்பது என்ற கொள்கையை வகுத்துக் கொண்டிருப்பதுபோல இந்தத் திட்டத்திற்கும் இந்த ஆண்டு என்று ஒரு காலவரையறையை அரசு ஏற்படுத்தியிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, காலவரையறை வைத்து தமிழகம் முழுவதற்கும் குடிநீர் வழங்கச் செய்ய வேண்டுமென்கிற ஆர்வம் அரசுக்கு இருக்கிறது. மின்சாரம் வழங்குவதற்கு ஒரு காலவரையறை குறிப்பிட்டுள்ளதைப்போல இந்தத் திட்டத்திற்குக் குறிப்பிடுவதற்கும் இன்னும் கொஞ்ச காலம் தேவை.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர்த் திட்டத்திற்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது? நிதிவசதி அதிகமாக இல்லாத பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகமான நிதியை ஒதுக்கி, குடிநீர்த் திட்டத்தை அரசு செய்து தருமா ?

(விடை இல்லை.)

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, குடிநீர்த் திட்டத்திற்காக ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து கடன் பெறுவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படிச் செய்யாமல், பொதுமக்களிடமிருந்தே கடன் எழுப்பி இந்த நல்ல காரியத்திற்குப் பயன்படுத்திக் கொண்டால் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, வருவதை விட்டுவிட்டு வம்புக்குச் செல்ல வேண்டியதில்லை. (சிரிப்பு).

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, குடிநீர் சப்ளை செய்வது சம்பந்தமாக, சில பஞ்சாயத்துக்களில் இன்வெஸ்டிகேஷன் சார்ஜ் என்கிற அளவில் அதிகப்படியான தொகையைக் கட்ட வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது. சில பஞ்சாயத்துக்களால் அந்தத் தொகையைக் கட்ட முடியவில்லை. ஆகவே, இன்வெஸ்டிகேஷன் சார்ஜையும் இந்தத் திட்டத்துடன் சேர்த்து, அதையும் கடனாக சேர்த்துக்கொண்டு, குடிதண்ணீர் சப்ளையை பஞ்சாயத்துக்களுக்குச் செய்து தர அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த யோசனை பரிசீலிக்கப்படலாம் என்றாலும், இப்போதுள்ள நிதிநிலையில் அதைத் தீவிரமாகப் பரிசீலிப்பதற்கில்லை.

குடிநீர்த் திட்டங்கள்.

* 839 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், வந்தவாசி பேரூராட்சியில் குடிநீர், வீட்டுக்குழாய் இணைப்புக்கு அளவு மானி (மீட்டர்) வைக்க வேண்டுமென்று பொது சுகாதாரத் துறை சூப்பரின்டெண்டிங் என்ஜினீயர் வற்புறுத்தியுள்ளாரா ?